**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1664 - 2010 ජූලි මස 23 වැනි සිකුරාදා - 2010.07.23

*1664 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) – மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1220 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, யூலை மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

B 79887-7,000-(07/2010)

# மாகாண சபை அறிவித்தல்கள்

## சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கல்வி நியதிச்சட்டம்

*06.05.2010 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*
*23.06.2010 ஆந் திகதி அனுமதி கிடைத்தது.*

சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் ஆணைப்படி,

ஸ்ரீயாணி பத்மலதா,
சபைச் செயலாளர் (பதில்).
சப்பிரகமுவ மாகாண மாகாண சபை.

## சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கல்வி நியதிச்சட்டம் (பிரகடனம்) சட்டமூலம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் ஒன்பதாவது உப அட்டவணையில் வெளியிடப்பட்ட பட்டியலில் காட்டப்பட்டுள்ள அளவிற்குக் கல்வி மற்றும் கல்விச் சேவை, அது தொடர்பான அல்லது அதற்குச் சமனான முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுக்காக ஒழுங்கு விதிகளையும் சட்ட திட்டங்களையும் தயாரிப்பதற்காகவும், சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பதவிகள், மற்றும் அவற்றின் கடமைக் கூறுகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்கானதுமான சாசனம். இச்சாசனம் இலங்கையின் சட்டச் சஞ்சிகையான (185 ஆம் அதிகாரம்) கல்விச் சட்டத்திற்கு அமைவானதாகும்.

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாண மாகாண சபையினால் இவ்வாறு சட்டமாக்கப்படுகிறது.

*சுருக்கப்பெயரும், நடைமுறைக்கு வரும் திகதியும்.*

1. இச்சாசனம் சப்பிரகமுவ மாகாண மாகாண சபையில் 2010 ஆம் ஆண்டின் 01 இலக்கம் கொண்ட சாசனமாக இனங்காணப்படுவதோடு, அது ஆளுநரின் அங்கீகாரம் பெறும் திகதியிலிருந்து நடைமுறைக்கும் வரும்.

### பகுதி I

### சப்பிரகமுவ மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அங்குள்ள ஏனைய பதவிகள்

*சப்பிரகமுவ மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் ஏனைய பதவிகளை ஸ்தாபித்தல்.*

2. நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகத் தேவைகளுக்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான திறமையுள்ள பிரசையை உருவாக்குவதற்குத் தேவையான கல்விச் சேவையைச் சப்பிரகமுவ மாகாணத்தினுள் உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதற்காகச் சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தினுள் சப்பிரகமுவ மாகாணத்தில் மாகாண சபையில் மாகாணக் கல்விப் பணிப்பாளர், மேலதிகக் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர் மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர் எனும் பதவிகள் இதனால் ஸ்தாபிக்கப்படுகின்றன.

3. (1) இச்சாசனத்தின் செயற்பாடுகளுக்காக இரண்டாவது உறுப்புரையின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாணக் கல்விப்பணிப்பாளர் (இங்கு இதன் பின்பு "கல்விப்பணிப்பாளர்" என இனங் காணப்படுபவர்) என்னும் பெயரின் கீழ் பதவி வகிப்பவர் சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் (பிரதானியாக) தலைவராக இருப்பார்.

(2) சப்பிரகமுவ மாகாண அமைச்சர் குழுவில் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் (இங்கு இதன் பின்பு அமைச்சர் என்று இனங்காணப்படும்) பொதுவான அல்லது விசேஷ சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு சப்பிரகமுவ மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இச்சாசனச் சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்புடைய நபராவார்.

(3) இச்சாசனச் செயற்பாடுகளுக்காக மேற்குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது உறுப்புரையின்கீழ் ஸ்தாபிக்கப்பட்ட கல்விப்பணிப்பாளர் பதவிக்காகப் பொருத்தமான ஒருவர் சப்பிரகமுவ மாகாண ஆளுநரால் நியமிக்கப்படுவார்.

(4) இச்சாசனச் செயற்பாடுகளுக்காக மேல் குறிப்பிட்ட மூன்றாம் உறுப்புரையின் கீழ் ஸ்தாபிக்கப்படும் மாகாணக் கல்விப்பணிப்பாளர், மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர், கோட்டக் கல்விப்பணிப்பாளர், மற்றும் உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆகிய பதவிகளுக்காகப் பொருத்தமானவர்கள் சப்பிரகமுவ மாகாண ஆளநரால் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஒருவரால் நியமிக்கப்படுவர்.

(5) இச்சாசனம் நடைமுறைக்கு வரும் தினத்தன்று இங்கு குறிப்பிட்டு உறுதி செய்யப்பட்ட சகல பதவிகளும், பதவி வகிக்கின்ற சகல அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் இச்சாசனத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதோடு அவர்கள் அதேவிதத்தில் சேவையில் ஈடுபடவும் வேண்டும்.

*அலுவலர்களை நியமித்தல் மற்றும் இடமாற்றம் செய்தல்.*

4. (1) உரிய தகுதி உடையவர்களைச் சப்பிரகமுவ மாகாணத்தினுள் ஆசிரிய சேவைக்கு நியமித்தல், ஒழுக்கக்கட்டுப்பாடு பேணல், இடமாற்றம் செய்தல் மற்றும் பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமித்தல், உட்படக் கல்வித் துறைக்குப் பொருத்தமான வேறு அதிகாரிகளை நியமித்தல், நிருவகித்தல், இடமாற்றம் செய்தல் என்பன ஆளுநரைச் சார்ந்தவையாகும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) உப உறுப்புரையின் கீழ் ஆளுநர், ஆளுநரைச் சார்ந்த அதிகாரங்களை காலத்திற்குக் காலம் தனது விருப்பத்தின் பேரில் சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவிடம் அல்லது சப்பிரகமுவ மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் ஊடாக சப்பிரகமுவ மாகாணப் பிரதான செயலாளர், கல்வி விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள மாகாண அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர் அல்லது வேறு மாகாண அரச சேவையின் கீழ் சேவைபுரியும் கல்வித் திணைக்கள அலுவலர் ஆகியவர்களில் ஒருவரிடம் ஒப்படைக்க முடியும்.

*சப்பிரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளரின் அதிகாரங்களும் கடமைகளும், பொறுப்புக்களும்.*

5. சப்பிரகமுவ மாகாணக் கல்விப்பணிப்பாளரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் கீழ்க் குறிப்பிடும் வகையில் அமையும்.

(1) சகல மாகாண சபைப் பாடசாலைகள், முன் பள்ளிகள் மற்றும் ஏனைய கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான வசதிகளைத் திட்டமிடல்.

(2) முதலாம் பந்தியில் குறிப்பிட்ட சகல மாகாண சபைப் பாடசாலைகள் சகல முன் பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றை மேற்பார்வை செய்தலும், முகாமைத்துவம் செய்தலும்.

(3) கல்வி அபிவிருத்திக்கான திட்டங்களையும், வருடாந்த நடைமுறைத் திட்டங்களையும் ஒழுங்குபடுத்துதல்.

(4) வருடாந்தக் கல்வி அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

(5) கல்வி அலுவலகர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரின் செயலாற்றுகைத் தரக் கணிப்பீட்டைச் செய்தல் (மதிப்பிடுதல்).

(6) (I) க. பொ. த. (சாதாரணதரப்) பரீட்சைக்குத் தோற்றிய பின்பு பாடசாலையை விட்டு விலகிச் செல்லும் பிள்ளைகளுக்கான தொழிற் பயிற்சி மற்றும் வழிகாட்டற் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(II) தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்விப் பயிற்சிபெற்றவர்களைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பல்கலைக்கழகங்கள் வரை உயர்கல்வித் தகைமைகள் பெற்றுக் கொள்வதற்கு உதவுதல், வழிகாட்டுதல், வசதிகளை ஒழுங்கமைத்தல்.

(III) தேசிய கல்வி நிறுவகத்தின் அனுமதி பெறப்பட்ட சேவைக் காலப் பயிற்சிச் செயற்றிட்டங்களை நடாத்துதல்.

(7) பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படும் பரீட்சைகள் மற்றும் அரச கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கமைக்கப்படும் பிரதேசப் பரீட்சைகள் ஆகியவற்றை நடாத்துதல்.

(8) முறை சாராக் கல்வி பற்றிய செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(9) (I) முன்பள்ளிகளைப் பதிவு செய்தலும், மேற்பார்வை செய்தலும்.

(II) தேசிய கல்வி நிறுவகத்தின் வழிகாட்டலின்படி முறைசார்ந்த பாடநெறிகளைத் தயாரித்தலும், முன்பள்ளி இல்லத்தலைவிகளுக்குப் பயிற்சி அளித்தலும்.

(10) ஆரம்பப் பாடசாலைகளின் பாடத்திட்டத்திலும் இடைநிலைக்கல்வி சம்பந்தமாகத் தெரிவு செய்யப்பட்ட பாடங்களில் பிரதேச வேறுபாடுகளின் தேவைகளுக்கேற்பத் தேசிய கல்வி நிறுவகத்தின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுத்தல்.

(11) கற்பித்தல் உபகரணங்கள், கட்புல, செவிப்புல உபகரணங்கள் மரத்தளபாடங்கள், வேறு உபகரணங்கள் ஆகியவற்றை ஒதுக்கீடு செய்தல் மற்றும் விநியோகித்தல்.

(12) பாடசாலைக் கட்டிடங்கள், நூல் நிலையம், விளையாட்டு மைதானம், கல்வித் தேவைகள் சம்பந்தமான வேறு கட்டிடங்கள் ஆகியவற்றை அமைத்தலும், பராமரித்தலும்.

(13) அரச கல்வி அமைச்சினால் குறிப்பிடப்படும் தீர்மானிக்கப்பட்ட உபகரணங்கள் சிலவற்றைத் தவிர விஞ்ஞான உபகரணங்கள் பெறலும், விநியோகித்தலும்.

(14) தேசிய நூல் நிலைய சேவைக் குழுவினால் செய்யப்படும் வழிகாட்டல்களுக்கு அமையப் பாடசாலை நூல் நிலையங்களை ஒழுங்கமைத்தலும் அபிவிருத்தி செய்தலும்.

(15) மேற்குறிப்பிட்ட பொறுப்புக்கூறல்களையும் கடமைகளையும், பொறுப்புக்களையும் நிறைவேற்றுவதற்காகத் தேவைப்படும் வேறு சில கடமைகளையும் நிறைவேற்றுதல்.

கல்விப் பணிப்பாளர் தனக்குரிய அதிகாரங்களை இன்னொருவருக்கு ஒப்படைக்க முடியும்.

6. (1) இச்சாசனத்தின் கீழ் அல்லது இதன் கீழ் செய்யப்பட்ட ஆணையின்கீழ்க் கல்விப் பணிப்பாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எந்தவொரு அதிகாரத்தை அல்லது கடமையை அவர் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமோ அல்லது வேறு ஒரு அதிகாரியிடமோ ஒப்படைக்க முடியும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்ட சகலரும் கல்விப் பணிப்பாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களின்கீழ் அவ்வதிகாரங்களைச் செயற்படுத்தல் வேண்டும்.

## பகுதி II

மாகாண ஆலோசனைச் சபையை ஸ்தாபித்தல்.

7. (1) சப்பிரகமுவ மாகாண முதலமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் கல்விக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரினால் கல்வித் துறையில் நிபுணத்துவம் வாய்ந்த வல்லுநர்கள் ஒன்பது பேரைக்கொண்ட மாகாணக் கல்வி ஆலோசனைச் சபையை (இங்கு இதன் பின்பு 'சபை' என்று இனங்காணப்படும்) சப்பிரகமுவ மாகாணத்துள் அமைக்க முடியும்.

(2) பல்கலைக்கழகம், கல்வியியற் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள், பிரிவேனாக்கள், சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம் எனும் நிறுவனங்களினதும் மொழி, சமயம், கலாசாரம் ஆகிய பிரிவுகளிலும் தமிழ் மொழி மூலம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிறுவனங்களினதும் தனி நபர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் ஏழு பேர் (07) கல்வி விடயத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டும்.

(3) கல்வி விடயத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரினால் அவரின் விருப்பப்படி மேலும் உறுப்பினர்கள் இருவர் (02) நியமிக்கப்பட வேண்டும்.

(4) இவ்வுறுப்பினர்களில் ஓர் உறுப்பினர், அந்த மாகாண ஆலோசனைச் சபையின் தலைவராக அமைச்சரினால் பெயரிடப்படவேண்டியதோடு, அமைச்சரினால் பெயர் குறிப்பிடப்படும் மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் அதன் செயலாளராகவும் நியமிக்கப்பட வேண்டும்.

(5) மாகாண ஆலோசனைச் சபையின் எந்தவொரு கூட்டத்திற்கும் சமுகந்தரும் உரிமை கல்விப் பணிப்பாளருக்கு இருப்பதோடு அச்சபையினால் தேவையெனக் கருதப்படும் சந்தர்ப்பத்தில் அங்கு எந்தவொரு கூட்டத்திலும் கலந்துகொள்ள ஆலோசனைச் சபையின் சிபாரிசின் பேரில் எந்தவொரு அதிகாரிக்கும் அழைப்பு விடுக்கும் உரிமை ஆலோசனைச் சபையின் தலைவருக்கும் உண்டு.

(6) மாகாண ஆலோசனைச் சபையின் கூட்டத்தைக் கூட்டுதல், நடாத்துதல், அது சம்பந்தமாகப் பின்பற்ற வேண்டிய செயல்முறை ஒழுங்கு அதிகாரங்கள் மற்றும் விடய வரையறை ஆகியன பற்றி இச்சாசனத்தின் கீழ் அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையினால் ஆணையிட முடியும்.

மாகாண ஆலோசனைச் சபையின் கடமைகள்.

8. (1) கல்வி விடயத்திற்கு அல்லது கல்வி வசதிகள் முழுமையாக வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளின் போதும் அமைச்சரினால் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளிலும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவது மாகாண ஆலோசனைச் சபையின் தலையாய கடமையாகும்.

(2) இப்பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ள கடமைகளுக்கு மேலாக, கல்வி விடயத்திற்குப் பொருத்தமான மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்படும் ஏதாவது சாசனத்தில் ஒப்படைக்கப்படும் வேறு ஏதாவது கடமைகளை நிறைவேற்றுதலும் ஆலோசனைச் சபையினால் செய்யப்படக்கூடியன.

மாகாண ஆலோசனைச் சபையின் பதவிக் காலம், விலகுதல் மற்றும் பதவி விலக்குதல்.

9. (1) மாகாண ஆலோசனைச் சபையின் சகல உறுப்பினர்களும் மரணம், இராஜினாமா அல்லது பதவி நீக்கம் ஆகியவற்றால் முன்னதாகப் பதவி வெற்றிடம் ஆனால் அன்றி நியமிக்கப்படும் தினத்திலிருந்து மூன்று (3) வருட காலம் பதவி வகிக்க வேண்டும்.

(2) மாகாண ஆலோசனைச் சபையின் அமைச்சரினால் நியமிக்கப்படும் யாராவது உறுப்பினர் விலக்குவதற்குத் தகுதியானவர் என அமைச்சர் கருதுவாராயின் அமைச்சரினால் அவ்வுறுப்பினர் அப்பதவியிலிருந்து நீக்கம் செய்யப்படலாம்.

(3) ஆலோசனைச் சபையின் எந்தவொரு உறுப்பினரும் அமைச்சரிடம் கையளிக்கும் எழுத்து மூலமான அறிவித்தலினால் இராஜினாமாச் செய்யலாம்.

(4) முன்னர் அறிவித்து அனுமதி பெறாமல் வெளிநாடு செல்லுதல் அல்லது முன்பு அறிவித்து அனுமதி பெற்று அல்லது நோய்வாய்ப்பட்டதினாலோ அல்லது வேறு ஏதாவது காரணத்தினால் அல்லது நடப்பாண்டினுள் நடைபெற்ற கூட்டங்களில் தொடர்ச்சியாக மூன்று கூட்டங்களுக்குச் சமுகந்தராத எந்தவொரு உறுப்பினரும் அப்படிச் சமுகந்தராத தினத்தில் இருந்து தனது உறுப்பினர் பதவியைக் கைவிட்டுச் சென்றவராகக் கருதப்படுவார்.

(5) நோய்வாய்ப்படல் அல்லது விடுமுறை பெற்றுள்ளதால் அல்லது சுயதேவையினால் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு யாராவது உறுப்பினர் ஒருவருக்குத் தற்காலிகமாக வரமுடியாத சந்தர்ப்பத்தில் அவருக்காகப் பதிற்கடமை புரிவதற்கென வேறு ஒருவரை அக்காலத்திற்கு அமைச்சர் நியமனம் செய்ய முடியும்.

(6) யாராவது ஓர் உறுப்பினர் காலமாதல், இராஜினாமாச் செய்தல் அல்லது பதவியிலிருந்து நீக்கப்படல் ஆகிய காரணங்களினால் ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புதவற்காக 07 ஆவது பிரிவில் (1) உப பிரிவில் உள்ள சட்டதிட்டங்களைக் கவனத்திற் கொண்டு வேறு ஒருவரை அசைம்சர் நியமனஞ் செய்ய முடிவதோடு அப்படி நியமனம் செய்யப்படுபவர் முன்னைய உறுப்பினரின் எஞ்சிய பதவிக் காலத்திற்குப் பதவி வகிக்கவேண்டும்.

கூட்ட நடப்பெண்ணும் கூட்ட நடைமுறை ஒழுங்கும்.

10. (1) சபையின் ஏதாவது கூட்டம் ஒன்றிற்கான கூட்ட நடப்பெண் உறுப்பினர் மூவரைக் (3) கொண்டதாய் இருக்க வேண்டும்.

(2) தலைவர் சமுகம் அளித்திருப்பின், சபையின் சகல கூட்டங்களுக்கும் அவர் தலைமை வகிக்க வேண்டும். தலைவர் சமுகந் தராதவிடத்து சமுகங்கொடுத்துள்ள உறுப்பினர்கள் தங்களில் ஒருவரை அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பதற்காகத் தெரிவு செய்து நியமித்தல் வேண்டும்.

(3) சபைத் தலைவர் நோய்வாய்ப்பட்டிருந்தால் அல்லது இலங்கைக்கு வெளியே சென்றிருந்தால் அல்லது ஏதாவது காரணத்தால் அல்லது தற்காலிகமாகத் தன்னுடைய பதவியில் செயற்படுவதற்கு இயலாதவிடத்து அவ்வகைச் சந்தர்ப்பங்களில் அமைச்சரினால் சபையின் வேறு உறுப்பினர் ஒருவர் அப்பதவியின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட முடியும்.

உறுப்பினருக்குரிய கொடுப்பனவு.

11. அமைச்சர் அவையில் நிதிக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் உடன்பாட்டுடனும் சப்பிரகமுவ மாகாண சபையின் அங்கீகாரத்துடனும் குறிப்பிட்ட அளவு/கொடுப்பனவு மாகாண ஆலோசனைச் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஆலோசகர் பதவி நியமனத்திற்குத் தகுதி அற்றவர்கள்.

12. (1) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற உறுப்பினர் அல்லது மாகாண சபை உறுப்பினர் அல்லது ஏதாவது உள்ளூராட்சி நிறுவனத்தில் மக்கள் பிரதிநிதியாகச் செயற்படும் எத் தனிநபராயிருப்பினும் அவர்கள் மாகாண ஆலோசனைச் சபை உறுப்பினராக நியமிக்கப்படாதிருக்க வேண்டும்.

(2) விரும்பத்தகாத மனப்பாங்கு உடையவராகவோ அல்லது செல்வந்த நிலையை இழந்தவராகவோ அல்லது சொத்துக்களை மறைத்து வைத்திருந்தவராக அறிவிப்புச் செய்யப்பட்ட ஒருவராகவோ அல்லது எவ்விதத்திலோ விபரிக்கக் கூடிய சிறைத் தண்டனைக்கு உட்பட வேண்டிய குற்றம் இழைத்தவராகவோ நீதிமன்றத்தால் தீர்ப்புக் கூறப்பட்ட ஒருவர் மாகாண ஆலோசனைச் சபை உறுப்பினராக நியமிக்கப்படாதிருக்க வேண்டும்.

(3) அரசாங்கத்தில் பதவி வகிக்கும் ஒருவர் ஏக காலத்தில் மாகாண ஆலோசனைச் சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு அவரால் வகிக்கப்படும் பதவி தகுதியின்மையாகக் கருதப்படக் கூடாது.

## பகுதி III

### முன்பள்ளிக் கல்வி மற்றும் விசேட பாடசாலைகள்

முன்பள்ளிக் கல்வி.

13. வேறு சில சாசனங்களின் சட்டதிட்டங்களின் கீழ் மாகாணத்தினுள் ஸ்தாபிக்கப்பட்ட முன் பள்ளிக் கல்விக்காகத் தேவையான முன்பள்ளி இல்லத்தாய்மார்கள், மற்றும் ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், என்பன கல்விப் பணிப்பாளரினால் அல்லது அவரால் அதற்காக அதிகாரம் அளிக்கப்பெற்ற ஒருவரால் செய்யப்படவேண்டியதாகும்.

விளையாட்டு மற்றும் அழகியற் பாடங்களுக்கான பாடசாலைகள்.

14. (1) வேறு சில சாசனங்களின் சட்டதிட்டங்களுக்கு அமைய விளையாட்டு மற்றும் அழகியல் விடயங்களுக்கான தனியான பாடசாலைகளும் விசேட உதவி தேவையானவர்கள் மற்றும் வளர்ந்தோர் ஆகியோருக்காகத் தனியான பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படுவதற்குக் கல்விப் பணிப்பாளரால் அல்லது அதிகாரம் அளிக்கப்பெற்ற ஒருவரால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவை தவிர அதற்காகப் பொதுப் பாடசாலைகளிலும் பிரிவுகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.

(2) இப்பிரிவில் (1) முதலாம் உப பிரிவில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ அதன்படி அவ்வுபபிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்காக வேறான பாடசாலைகள் ஆரம்பிப்பதற்குப்பதிலாக, இயலுமான சந்தர்ப்பத்தில் பொதுப் பாடசாலைகளில் விசேட பிரிவுகளை உருவாக்குதலும் திணைக்களத்தினால் செய்யப்படக்கூடியதாகும்.

(3) ஆரம்பிக்கும் தனியான பாடசாலைகளிலும், பாடசாலைகளில் விசேட பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அதற்காக அமைச்சரினால் இச்சாசனத்தின்கீழ் செய்யப்படும் கட்டளைகளுக்கு அமைவாகப், புலமைப் பரிசில்கள் வழங்குதலும் அவசிய சந்தர்ப்பங்களில் செய்யப்படமுடியும்.

(4) இப்பிரிவில் (1) ஆம் உப பிரிவின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் பொதுக் கல்விக்கான காலத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உண்டு என்பதோடு அக்காலம் பொதுப் பாடசாலையில் கற்றல் நிகழும் காலத்திற்குச் சமனானதாக அமைய வேண்டும்.

## பகுதி IV

### பொதுச் சட்ட திட்டங்கள்

கட்டாயக் கல்வி.

15. சப்பிரகமுவ மாகாணத்தினுள் இருக்கும் பாடசாலை செல்லவேண்டிய வயதிலுள்ள சகல மாணவர்களுக்கும் அம்மாகாணத்தினுள் அமைந்துள்ள அரச பாடசாலைகளில் கட்டாயக் கல்விக்கான சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொடுத்தல் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

16. வயது ஐந்து முதல் பதினாறு வயதிற்கிடையிலுள்ள பிள்ளைகள் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்காகப் பாடசாலைகளில் சேர்த்தல், அப்பிள்ளைகளின் பெற்றோர்களின் அல்லது பாதுகாவலர்களின் பொறுப்பாகும்.

பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்தல்.

17. சப்பிரகமுவ மாகாணப் பாடசாலைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்காக விண்ணப்பிக்கும் எவ் விண்ணப்பதாரியுடைய விண்ணப்பமும் அவ்விண்ணப்பதாரியினது அல்லது அவ்விண்ணப்பதாரியின் பெற்றோர்களது அல்லது பாதுகாவலரது அல்லது அவர்களில் ஒருவரது சமயம், இனம், வகுப்பு, குலம், சமூக நிலை அல்லது மொழி என்ற அடிப்படையில் நிராகரிக்கப்படக்கூடாது. விண்ணப்பதாரிகளுடைய அல்லது தம் பெற்றோரில் யாரோ ஒருவரது சமயம் அல்லது இனம் அல்லது வகுப்பு அல்லது குலம் அல்லது சமூக நிலை அல்லது மொழி என்ற அடிப்படையில் அவ்விண்ணப்பதாரியை சப்பிரகமுவ மாகாணத்தின் எந்தப் பாடசாலையிலும் அனுமதிப்பதை நிராகரிக்கக்கூடாது.

சமயம் கற்பிப்பது.

18. (1) இங்கு இதுவரை உள்ள சட்டதிட்டங்களுக்குக் கீழ் பாடசாலையில் கற்கும் சகல மாணவர்களுடைய பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் பின்பற்றும் சமயம், அம்மாணவர்களுக்குப் பாடசாலையில் பொதுக் கல்வி நடைமுறையில் ஒரு பகுதியாக கற்பிக்கப்பட வேண்டும்.

(2) பாடசாலையில் சமயம் தொடர்பான அனுபவத்திற்கு அல்லது இறை வணக்கத்தை நிகழ்த்துவதற்கு இருக்க வேண்டிய காலம் பாடசாலை ஆரம்பத்தில், அல்லது முடிவு நேரத்தில் இல்லாவிடின் ஆரம்பத்திலும் முடிவு நேரத்திலும் இருக்க வேண்டியதோடு அக்குறிப்பிட்ட பொருத்தமான காலம் தீர்மானிக்கப்பட்டதாயும், அது குறிக்கப்பட்ட கால அட்டவணை சகல வகுப்பறைகளிலும் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

மாணவருடைய சமயத்தைத் தீர்மானித்தல்.

19. மாணவருடைய சமயம் எதுவென்பது கீழ்க் காட்டப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமையத் தீர்மானிக்கப்படல் வேண்டும் :-

(அ) ஒரு மாணவருடைய தந்தை நல்ல சுய சிந்தனையுடன் தனது சமயம் சம்பந்தமாகக் கூறுவாராயின் அம்மாணவனுடைய சமயம் அச்சமயமாகக் கொள்ள வேண்டும்.

(ஆ) (அ) பந்தியின்கீழ்க் குறிப்பிடப்பட்ட கருத்து வெளிப்பாடு இல்லாதவிடத்து மாணவனுடைய தாய் சுய சிந்தனையுடன் தனது சமயம் சம்பந்தமாக வெளிப்படுத்துவாராயின் அம்மாணவனுடைய சமயம் அச்சமயமாகக் கொள்ளப்பட வேண்டும்.

(இ) (அ), (ஆ) பந்திகளின்கீழ் கூறப்பட்ட கருத்து வெளியிடப்படாதவிடத்து மாணவருடைய சட்டபூர்வமான பாதுகாவலராகும் ஒருவரினால் மாணவனுடைய சமயமாக வெளியிடப்படும் சமயம் மாணவருடைய சமயமாகக் கொள்ள முடியும்.

பாடசாலைகளுக்கு அனுமதிக்கும் போது கட்டணம் அறவிடமுடியாது என்பதும் வசதிகள் சேவைக் கட்டணமும்.

20. (1) பாடசாலையில் அனுமதி பெறுவதற்காகவோ அல்லது கல்வி வழங்குவதற்காகவோ எவ்விதக் கட்டணமும் அறவிடப்பட முடியாது.

(2) இவ்வுறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட சட்டதிட்டங்களுக்கு முரண்படாத வகையில் பாடசாலையில் பாட விடயம் சம்பந்தமான, மற்றும் இணைப்பாட விடயம் சம்பந்தமான செயற்பாடுகள், சேவைகள் அகியவற்றை நடாத்துதல் தொடர்பாக ஏற்படும் ஏதாவது செலவினங்களை ஈடுசெய்வதற்காக மாணவர்களிடம் வசதிகள் சேவைக் கட்டணமாகக் குறிப்பிட்ட நிதி கட்டணமாக அறவிடுவதற்கு வழி செய்யும் விதத்தில் தேவையான பிரமாணங்களை இச்சாசனத்தின் கீழ் உருவாக்கிக் கொள்ள முடியும்.

(3) வசதிகள் சேவைக் கட்டணமாக அறவிடப்படும் நிதியைச் செலுத்த முடியாத காரணத்தைக் கொண்டு பாடசாலைக்கு அனுமதிக்காமை அல்லது பாடசாலைக்குச் சமுகந்தராமை தொடர்பாக மாணவர்களுக்குத் தண்டனை வழங்குதல் செய்யக்கூடாது. அப்படித் தண்டனை வழங்குவதைத் தடுப்பதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல் பாடசாலை அதிபருடைய பொறுப்பாகும். அமைச்சரினால் அல்லது மாகாணக் கல்வி விடயத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் செயலாளரினால் அல்லது கல்விப் பணிப்பாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட வேறு யாராவது ஒருவரினால் பாடசாலையின் செயற்பாடுகள், பாடசாலைச் சொத்துக்கள் ஆஸ்திகள் என்பன உட்பட்டவை பரிசீலனை செய்யப்படுவது சட்டபூர்வமானதாகும்.

புதிய தனியார் பாடசாலைகள் அல்லது உதவி வகுப்புக்கள் ஆரம்பிப்பவர் அது பற்றிக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்தல் கொடுக்க வேண்டும்.

21. (1) (அ) புதிய தனியார் உதவி வகுப்புக்கள் அல்லது தனியார் பாடசாலை ஆரம்பிப்பது அல்லது ஏதாவது கட்டிடங்களில் பாடசாலை செல்லவேண்டிய வயதுடைய பிள்ளைகளுக்குச் சிங்களம், தமிழ் அல்லது வேறு ஏதாவது ஒரு மொழியில் கல்வி வழங்குவதற்காக வகுப்பு அல்லது வகுப்புக்கள் நடத்துவதற்கு எதிர்பார்க்கும் யாராவது ஒருவரினால் முன்மொழியப்பட்ட பாடசாலை அல்லது வகுப்பு நடாத்துதல் என்பவற்றை ஆரம்பிப்பதற்கு இரு (02) மாதங்களுக்கு முன்பு ஆரம்பிப்பவர்கள் அப்பாடசாலை அல்லது அவ்வகுப்பு பற்றிய விபரங்கள் உள்ளடங்கிய எழுத்து மூலமான விண்ணப்பத்தைக் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(1) (ஆ) இச்சட்டம் செயற்படும் தினத்தில் சப்பிரகமுவ நிருவாக எல்லை பிரதேசத்தினுள் செயற்படும் தனியார் உதவி வகுப்புக்கள், மற்றும் தனியார் பாடசாலைகள் பற்றிய விபரங்கள் உள்ளடங்கிய எழுத்துமூலமான அறிவித்தல் மூன்று மாத (03) காலத்தினுள் சப்பிரகமுவ மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கப்படவேண்டும்.

(2) இவ்வுறுப்புரையின் (1) (அ), (1) (ஆ) ஆம் உபபிரிவுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள விபரங்களுக்கு மேலதிகமாக முன்மொழியப்பட்ட அப்பாடசாலை அல்லது கல்வி வகுப்பு அல்லது வகுப்புக்கள் தொடர்பாகக் கல்விப் பணிப்பாளரினால் பணிக்கப்படும் வேறு விபரங்களைச் சமர்ப்பித்தல் (1) ஆம் உபபிரிவின்கீழ் விண்ணபத்தை முன்வைத்தவரைச் சார்ந்த பொறுப்பாகும்.

(3) (அ) இவ்வுறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின்கீழ் கல்விப் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணபத்திற்கு உரிய ஏதாவது பாடசாலை, கல்வி வகுப்பு அல்லது வகுப்புக்களை அங்கீகரித்தலுக்குக் கல்வப் பணிப்பாளர் இதற்குப் பொருத்தமான இச்சாசனத்தில் 28 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் வழங்கப்பட்ட கட்டளையினூடாக விதிக்கப்பட்ட தரத்தைக் கவனத்தில் கொண்டு அங்கீகாரத்தையோ அல்லத நிராகரிப்பையோ வழங்கலாம்.

(3) (ஆ) ஞாயிற்றுக் கிழமைகளில் காலை நேரத்தில் முற்பகல் 8.00 மணியிலிருந்து 2.00 மணி வரையும், பௌர்ணமி தினங்களிலும் எவ்விதத் தனியார் பாடசாலைகளையோ, அல்லது உதவி வகுப்புக்களையோ நடாத்த முடியாது.

(4) இவ்வுறுப்புரையின் (1), (2), (3) ஆம் உப உறுப்புரைகளின் சட்ட திட்டங்களை முறித்துக் கொண்டு ஏதேனும் பாடசாலைகளை ஆரம்பிக்கும், அல்லது ஏதேனும் கல்வி வகுப்பு அல்லது வகுப்புக்களை நடாத்தும் யாராவது ஒருவர் இச்சாசனத்தின் கீழ்த் தண்டனைக்குரிய குற்றவாளியாவார்.

பாடசாலையும் சுற்றுப் புறமும் வேறு நடவடிக்கைகளுக்குப் பாவிக்க முடியாது.

22. பாடசாலைக் கட்டிடம் உபகரணம் மற்றும் பாடசாலைச் சுற்றாடல், கல்வி, விளையாட்டு, கலாசாரம், பொது நடவடிக்கைகள், மற்றும் சமய நடவடிக்கைகள் தவிர்ந்த வேறு நடவடிக்கைகளுக்குப் பாவிக்காதிருக்க வேண்டியதோடு, அதே போன்று உபகரணம் அல்லது பாசடாலைச் சுற்றாடலும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வேறு விடயங்களுக்காகப் பாவிக்க வேண்டி ஏற்படும்போது அதற்காகக் கல்விப் பணிப்பாளரின் முன்னனுமதி பெறல் வேண்டும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளரின் கீழ் வரும் ஆஸ்திகள் சொத்துக்கள்.

23. இச்சாசனம் செயற்படும் தினத்திற்கு முன்பான தினத்தில் கல்வி விடயங்களை செயற்படுத்தும் நோக்கில், அரசிடம் அல்லது மாகாண சபையிடம் அல்லது வேறு வழிகளில் இருந்து கிடைக்கப்பெற்ற ஏதாவது ஆஸ்திகள் அல்லது சொத்து உடமைகள் இவ்வாறு மேலே கூறப்பட்ட விடயங்களைச் செயற்படுத்துவதற்காக ஈடுபடுத்தப்பட்டிருப்பின் அவை அனைத்தும் இச்சாசனத்தின்கீழ் மாகாணக்கல்விப் பணிப்பாளருக்குச் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ள ஆஸ்தி அல்லது சொத்துடமைகளாகக் கருதப்பட வேண்டும்.

நிதியைப் பெற்றுக் கொள்ளுதல்.

24. இச்சாசனத்தின்கீழ் உருவாக்கப்படும் நிறுவனங்களை நடாத்துவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்ளல் அல்லது செலவு செய்தல், 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கங் கொண்ட மாகாண சபைச் சட்டத்திற்கு அமைவாக நடைபெறல் வேண்டும்.

வருடாந்த நிருவாக அறிக்கை.

25. (1) ஒரு வருடத்தினுள் நிருவாகத்தில் கல்வி நடவடிக்கைகளை நடாத்திய விதம், எழுந்துள்ள சிக்கல்கள், அச்சிக்கல்களை விடுவிப்பதற்காக எடுத்துள்ள படிமுறைகள், கல்வி தொடர்பான வளர்ச்சிப் போக்கு ஆகியன பற்றிக் குறிப்பிடப்பட்ட வருடாந்த நிருவாக அறிக்கை அடுத்த வருட ஆனி 30 ஆந் திகதிக்கு முன்பு கல்விப் பணிப்பாளரினால் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) உபபிரிவு (1) இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட நிருவாக அறிக்கை அமைச்சரினால் இருமாத (2) காலத்தினுள் மாகாண சபையின் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அமைச்சருக்கு ஆணையிடும் அதிகாரம்.

26. (1) திணைக்களத்தின் கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாக விசேட அல்லது சாதாரண கட்டளைகளை அமைச்சர் திணைக்களத்திற்கு அவ்வப்போது எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட வேண்டியதோடு அக்கட்டளைகளுக்கேற்ப செயற்பட வேண்டியது திணைக்களத்தைச் சார்ந்த கடமையாகும்.

(2) அமைச்சினால் இச்சாசனத்தின் கீழ் முன்னராக வழங்கப்பட்ட ஆணைகளுக்கேற்ப (கட்டளைகளுக்கேற்ப) செயற்படுவது கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட இச்சாசனத்தின் கடமைகளுக்காக நியமிக்கப்படும் ஏனைய சகல அலுவலர்களையும் சார்ந்த கடமையாகும்.

## பகுதி V

### குற்றங்களும், தண்டனைகளும்

குற்றங்களும் தண்டனைகளும்.

27. (1) இச்சாசனத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டளைகளை அல்லது வழங்கப்பட்ட ஆணையை முறித்தல், அல்லது அதன்படி செயற்படுத்துவதிலிருந்து விலகிச் செல்லல், அல்லது இச்சாசனத்தின் கீழ் யாராவது ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றும்போது அவருக்கு வேண்டும் என்றே இடையூறு செய்தல், ஆகியவற்றில் ஈடுபடும் சகலரும் இச்சானசத்தின் கீழ், தண்டனைக்குரிய குற்றவாளிகளாவதோடு நீதிபதி ஒருவர் முன்னிலையில் நடாத்தப்படும் உடனடி விளைவுடைய வழக்கு விசாரணையின் பின்பு குற்றவாளியாக்கப்படும்போது ஆயிரம் ரூபாவிற்குக் குறையாத (ரூபா 1000.00) தண்டப்பணத்தைச் செலுத்துவதற்கும் அல்லது இரு (02) வருடத்திற்குக் குறையாத தடுப்புக் காவலுக்கு அல்லது தண்டப்பணம் தடுப்புக் காவல் ஆகிய இரு தண்டனைகளுக்கும் ஆளாக வேண்டும்.

(2) எப்படியாயினும் இச்சாசனத்தின் கீழ்வரும் குற்றத்திற்கு யாராவது தனி நபர், ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகளில் குற்றவாளியாகும் போது ரூபா ஐயாயிரத்திற்குக் (ரூபா 5000) குறையாத குற்றப் பணத்தைச் செலுத்துவதற்கும், ஆறு மாத கால கடூழியச் சிறைத் தண்டனைக்கும் ஆளாக வேண்டும்.

கட்டளைகளை உத்தரவுகளை உருவாக்குதல்.

28. (1) இச்சாசனத்தில் விதிக்கப்பட்ட அல்லது கட்டளைகளை உருவாக்குவதற்கு அதிகாரம் அளிக்கப்பெற்ற அல்லது சகல விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சரினால் கட்டளைகளை உருவாக்க முடியும்.

(2) இவ் உறுப்புரையின் (1) ஆம் உப உறுப்புரையின்கீழ்க் குறிக்கப்பட்டுள்ள சகல கட்டளைகளும் வர்த்தமானியில் வெளியிடப்படுவதோடு அப்படி வெளியிடப்பட்ட தினத்திலிருந்து அல்லது கட்டளையில் தீர்மானிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்ட ஏதாவது பின்னைய தினத்திலிருந்தோ அக்கட்டளைகள் செயற்படும்.

(3) மேலே (1) ஆம் உப உறுப்புரையின்கீழ் உருவாக்கப்பட்ட சகல கட்டளைகளும் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்பு கூடிய விரைவில் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஏதாவது கட்டளைகள் இருப்பின் அதன் கீழ் முன்பு செய்யப்பட்ட எதற்கும் நெறி பிறழ்வு ஏற்படாதவாறு அக்கட்டளையை அங்கீகரிக்காத தினத்திலிருந்து பிரிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

(4) ஏதாவது கட்டளை அப்படி பிரிக்கப்பட்டதாகக் கருதப்படும் திகதி (தினம்) வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும்.

விடுமுறைகள் பிரகடனம்.

29. மிக அவசியமாகத் தேவையான சந்தர்ப்பத்தில் பாடசாலை விடுமுறை தினத்தைப் பிரகடனம் செய்யும் அதிகாரம் அமைச்சரைச் சார்ந்ததாகும்.

சகல அதிகாரிகளும் ஊழியர்களும் அரச ஊழியர்கள்.

30. மாகாணத் திணைக்களத்தின் சகல அதிகாரிகளும் ஊழியர்களும் தண்டனைச் சட்டத் தொகுப்பின் நடவடிக்கைகளுக்காக அரச ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும்.

திணைக்களம் இலஞ்சச் சட்டக் கருத்திற்கு இசைய உப அட்டவணைப் படுத்தலுக்குரிய நிறுவனம்.

31. இலஞ்சச் சட்டக் கருத்திற்கு இசைய மாகாணக் கல்வித் திணைக்களம் ஆவணப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்பட வேண்டியதோடு அச்சட்ட மூலத்தின் சட்டதிட்டங்களை அதன்படியே விளங்கிக்கொள்ளவும் வேண்டும்.

32. இச்சாசனத்தில் ''ஆளுநர்'' என்பதால் குறிப்பிடப்படுவது சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் எனக் கருதப்படும்.

33. இச்சாசனத்தில் ''முதலமைச்சர்'' என்பது சப்பிரகமுவ மாகாணத்தின் முதலமைச்சர் எனக் கருதப்படும்.

34. இச்சாசனத்தில் ''அமைச்சர்'' என்பது சப்பிரகமுவ மாகாண சபையில் கல்வி விடயத்திற்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர் எனக் கருதப்படும்.

35. இச்சாசனத்தில் ''வர்த்தமானி'' என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி எனக் கருதப்படும்.

36. இச்சாசனத்தில் ''மாகாண சபைப் பாடசாலைகள்'' என்பது தேசிய பாடசாலைகள் பாதுகாப்புப் படையினருக்கான பாடசாலைகள் குறிக்கப்பட்ட அபிவிருத்தி முன்மொழிவு முறைகளுக்கான பாடசாலைகளான குறித்த பாடசாலைகள் தவிர சப்பிரகமுவ மாகாண சபையின் நிருவாக எல்லைக்குட்பட்டு அமைந்திருக்கும் சப்பிரகமுவ மாகாண சபைக்கு உரிய சகல பாடசாலைகளும் எனக் கருதப்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலம் மேலோங்கி நிற்றல்.

37. இச்சாசனத்தின் சிங்கள மொழி மூலத்திற்கும், தமிழ் மொழி மூலத்திற்கும் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

7-564

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.